அம்மைத் திருப்பல்லாண்டு

அம்மைத் திருப்பல்லாண்டு

*

ரெ. முத்துக்கணேசன்

*

பூங்கோதை — இராமநாதன்

திருமண வெளியீடு

இராட்சச - ஆவணி - 22

7—9—1975

3/3

வாரியார் வழங்கும் திருமண வாழ்த்து

முருகா.

முகாம்: கோபி
நாள்: 22-8-75

நேரிசை வெண்பா

நங்கைபூங் கோதையும்
நல்ராம நாதனும்
இங்கிதமாய் இல்லறத்தில்
இன்புற்று — மங்களமாய்
பல்லாண்டு வாழ்க!
பழநிக் குகனருளால்
எல்லா நலமும்
இசைந்து.

அன்பன்,
கிருபானந்தவாரி.

வாரியார் தந்த சாற்றுக் கவி

முருகா.

முகாம்: கோபி
நாள்: 22-8-75

நேரிசை வெண்பா

முத்துக் கணேசனும்
முத்தமிழ்தேர் மூதறிஞன்
எத்ததியும் ஏத்தி
இனிதுய்ய — நித்தியமார்
அம்மைதன் பல்லாண்
டளித்தான் படித்தோர்கள்
செம்மையுடன் வாழ்வர்
சிறந்து.

அன்பன்,
கிருபானந்தவாரி.

நறுந்தளிரே! மருக்கொழுந்தே! மரகதமே!

நாட்காலை பசுமை பூப்பாய்;

குறுந்தளிராம் கொடிவீட்டில் பிச்சியெனும்

குறும்பூவாய் இன்பம் ஈவாய்;

சிறந்தொளிசேர் செம்பூவும் பசுந்தழையும்

சேர்ந்தனபோல் சிவமும் நீயும்

அறந்தழைக்க நேர்பாதி கலந்தகோல

அழகினுக்கா யிரம்பல் லாண்டு,

பெயர்-மரகதவல்லி (ஊர்-ஈங்கோய்மலை)

விடிவறியா உயிர்கள்பால், மீன்போல

விழிநோக்கி அருளே செய்யும்

கடிகமழும் மலர்க்கூந்தல் கயல்விழியே!

கண்களிக்க அள்ளி யுண்டே

அடிமுதலாய் அழகனை நீ அணைந்தமையால்

அழகம்மை ஆனாய் நீயோ!

படிஎழுத வொண்ணாத பல்வளையாய்!

பரிசினுக்கா யிரம்பல் லாண்டு.

பல்வளை நாயகி (திருப்புள்ளமங்கை; பட்டீச்சுரம்)
அழகம்மை (திருக்களக்காமூர்; திருமழபாடி; திருமாந்துறை)

முல்லைமுதல் மக்களுயிர் அத்துணைக்கும்
    மூலத்தாய் நீயே யன்றோ!
எல்லையிலாக் காலவினை சிலந்தியாக
    எழுப்பிவிடும் துன்பப் பின்னல்
தொல்லையினில் வீழுமுயிர்த் துயர்துடைக்கத்
    தோகையுரு உமையு மாவாய்;
அல்லலிலாப் பெருவாழ்வே! அருமருந்தே!
    அன்பினுக்கா யிரம்பல் லாண்டு.

தோகையாம்பிகை (திருப்பாதிரிப் புலியூர்)
உமையம்மை (திருவிடைவாய்; திருஊரல்)
அருமருந்தம்மை (திருந்துதேவன்குடி)

படியறியோம்; நின்பதத்தின் பாங்கறியோம்;
பல்வேறு வினைகள் தம்மால்
இடியுருகும் கொடுஞ்செயல்கள் இழைத்த போதும்
இன்னுயிர்பால் கனிவு கண்டோம்;
படிவளரப் பொருளீந்து உணவூட்டிப்
பார்புரக்கும் முத்தம் மையே!
அடிதொழுவோம் அடைக்கலங்காண் அறம் வளர்த்தாய்!
அருளினுக்கா யிரம்பல் லாண்டு,

முத்தம்மை (திருஆமாத்தூர்)
அறம்வளர்த்தநாயகி (திருவையாறு)

வெற்றியினைச் செருக்கோடு விரும்பிநின்றேன்
    விளையாட்டாய்த் தோல்வி தந்தே
பற்றுடைய ஆணவத்தின் முனைமழுங்கப்
    பனிமுறுவல் செய்த எந்தாய்!
வெற்றுருவக் கருங்கல்லாய்க் கிடந்தநெஞ்சை
    வெண்கமலப் பூவாய் ஏற்றுப்
பொற்புருவாய்! அருள்தருவாய்! பூங்கோதாய்!
    புதுமைக்கா யிரம்பல் லாண்டு.

பூங்கோதை (திருக்காளத்தி; துறையூர்)

சீர்பெரிய நிலமெல்லாம் முகில்வழங்கும்
சிறுதுளிக்கே ஏங்கு மாப்போல்,
நீர்பெருக்கும் கடலனைத்தும் நிறையமுத
நிலவொளிக்கே ஏங்கு மாப்போல்,
பேர்பெரியாய்! உனைவணங்காப் பித்தனுமென்
பிஞ்சன்புக் கேங்கு கின்றாய்;
ஏர்சிறக்கும் ஏலவார்பூங் குழலம்மை
எளிமைக்கா யிரம்பல் லாண்டு.

ஏலவார் குழலி (திருவிற்குடி; திருவேடகம்)

நீர்நிலத்தில் மதுப்பூவைத் தென்றலுமே
நிதந்தழுவ மணமே கொள்ளும்;
தேர்புலத்தால் கவியமுதம் உண்டவுள்ளம்
தெளிந்தறிவு பெற்றே வாழும்;
பேரருளே! அஞ்செழுத்தை நெஞ்சகத்தே
பிரிந்தறியா எளியன் தன்னைப்
பாரதனுள் கண்பாராய் பால்மொழியே!
பரிவினுக்கா யிரம்பல் லாண்டு.

பாலினும் நன்மொழி (திருவாய்மூர்)

உன்னடியைப் பரவுதற்கு மண்ணகந்தான்
ஒளிர்பூவைப் பூத்துப் போற்றும்;
மின்னுபெரும் ஆழியொடு வானகமும்
மின்முத்தால் நீரால் போற்றும்;
தின்னவரு செந்தழலோ அகிற்புகையைத்
தென்றலுடன் தூவிப் போற்றும்;
பொன்னடியை எங்ஙனம்நான்போற்றிடுவேன்?
புகழினுக்கா யிரம்பல் லாண்டு.

மண்ணகத்தில் படிவதனைச் சிற்பியர்கள்
மாண்புறவே சமைத்துத் தந்தார்;
மண்ணகத்தில் ஓவியர்கள் வரைந்துன்றன்
மாணடியைத் தொழுது நின்றார்;
எண்ணகத்தில் உள்மலரும் கவிஇதழால்
எழிலடியைத் தொட்டேன்; எந்தம்
பண்ணகத்துத் தமிழேற்பாய் பண்மொழியே!
பண்பினுக்கா யிரம்பல் லாண்டு.

பண்மொழியம்மை (திருப்பாண்டிக் கொடுமுடி)

இருள்இரியச் சுடர்வயிரம் இணைந்தமுடி

அழகினுக்குத் திருப்பல் லாண்டு!

பொருள்விரிக்கும் விழிகளொடு புதுமுறுவல்

அழகினுக்குத் திருப்பல் லாண்டு!

மருளகற்றிச் சிவம்கலந்த மணக்கோல

அழகினுக்குத் திருப்பல் லாண்டு!

அருள்பொழியும் அங்கயற்கண் அம்மைக்குப்

பல்லாண்டு திருப்பல் லாண்டே!